# ஸ்ரீ வரலக்ஷ்மீ
# வ்ரத பூஜை



Credits: TamilBrahmins.com

# ஸ்ரீ வரலக்ஷ்மீ வ்ரதம்

## வ்ரத மஹிமை

நாம் அனைவரும் தேடும் செல்வத்திற்கு அதிபதியாக லக்ஷ்மியை வணங்குவது நமக்கு அனைத்து நன்மையையும் பெற்றுத்தரும். அதிலும் வரங்களை அள்ளித் தரும் வரலக்ஷ்மியை அவளது விரததினத்தில் வழிபடுவது சிறப்பு. இவ்விரதத்தை சிரத்தையுடன் செய்து தானும் பலனடைந்து, தன்னை சார்ந்தவர்களையும் இவ்விரதத்தை அனுஷ்டிக்க செய்து பயனடையச் செய்த சியாமபாலா என்னும் பெண்ணின் சரிதம் இது.

பத்ரச்ரவஸ் என்ற மன்னன், மிகச் சிறந்த விஷ்ணு பக்தன். இவனது மனைவியின் பெயர் சுரசந்த்ரிகா. இந்த தம்பதியர் அவர்களது செல்ல மகளான சியாமபாலாவை சக்கரவர்த்தியான மாலாதரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. ஒரு நாள் செந்தாமரை செல்வியான லக்ஷ்மி தேவி, வயதான சுமங்கலி வேடத்தில் சுரசந்த்ரிகாவிற்கு அருளும் நோக்குடன் அவளது அரண்மனைக்குள் பிரவேசித்தாள். அவளிடம் அன்போடு வரலக்ஷ்மி விரதத்தைப் பற்றி விளக்கமாகக் கூறி அதை கடைப்பிடிக்கும்படி சொன்னாள். ஆனால் அரசியான சுரசந்த்ரிகாவோ லக்ஷ்மிதேவியை ''யாரோ யாசகம் கேட்க வந்தவள்'' என்று நினைத்து மரியாதையில்லாமல் நடத்தி வெளியே அனுப்பி விட்டாள். அச் சமயம் தன் தாய் வீட்டுக்கு வந்த சியாமபாலா வருத்தம் தோய்ந்த முகத்துடன் ஒரு மூதாட்டி வெளியே வருவதைப் பார்த்தாள். மூதாட்டியை அன்புடன் உபசரித்து, வரலக்ஷ்மி விரத மகிமையை விரிவாக

Credits: TamilBrahmins.com

கேட்டு, உபதேசமும் பெற்றுக் கொண்டாள். பக்தியுடன் விரதத்தைக் கடைப்பிடித்தாள். விரத மகிமையால் சிறந்த செல்வம் பெற்றாள்.

இதே நேரம், அவள் பெற்றோர்கள் லக்ஷ்மிதேவியை மதிக்காத காரணத்தால் எல்லாவற்றையும் இழந்து ஏழைகளானார்கள். தன் பெற்றோர் ஏழ்மையில் அவதிப்படுவதை அறிந்த சியாமபாலா ஒரு குடம் நிறைய தங்க காசுகளை அனுப்பிவைத்தாள். ஆனால் அது அவர்கள் கையில் பட்டதும் அவர்களது கர்மவினையின் காரணத்தால் கரித்துண்டுகளாக ஆகிவிட்டது.

இதை அறிந்த சியாமபாலா தன் தந்தையின் அரண்மனையில் திரும்பவும் லக்ஷ்மி நித்ய வாஸம் செய்ய வேண்டும் என்று விரும்பினாள். தன் தாயை அழைத்து அவளுக்கு வரலக்ஷ்மி விரத பூஜையை செய்யும் படி கூறினாள்.

அவளும் மகள் சொன்னபடியே வரலக்ஷ்மி விரதத்தைக் கடைப்பிடித்து, பூஜை செய்து, அழிந்த செல்வங்களை எல்லாம் மீண்டும் பெற்று சுகவாழ்வு வாழ்ந்தாள். ஆகவே பெண்மணிகள் எல்லோரும் இந்த விரதத்தைக் கடைபிடித்து ஸகல ஐச்வர்யங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டுகிறோம்.

## கதை

முன்பொரு சமயம், தேவர்கள் வசிக்கும் கைலாயத்தில் பார்வதியும், பரமசிவனும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தனர். விளையாட்டு முடிவுக்கு வந்தது. அதில் யார் ஜெயித்தார்கள் என்ற வாக்குவாதம் இருவருக்கும் ஆரம்பமானது. அதை முடிவுக்கு கொண்டு வர சித்திரநேமி என்ற கந்தர்வனை மத்தியஸ்தம் செய்ய அழைத்தனர். ஆனால் அவனோ சிவனின் மீது கொண்ட அதீத பக்தியின் காரணமாக சிவபிரான்தான் ஜெயித்தார் என்று கூற, பார்வதி தேவி கட்டுக்கடங்காத சினம் கொண்டு, "நீ பொய் சொன்னதால் குஷ்டரோகியாகி ஒளியிழந்து போவாய்" என்று சபித்தாள்.



இதற்கு பரமசிவன் வருந்தி, "தேவீ! இந்த சித்திரநேமி மிகவும் நல்லவன். என் மீது கொண்டுள்ள பக்தியால் இவ்வாறு செய்துவிட்டான். நீ அவனை மன்னித்து அவனது சாபத்தை அகற்றுவாயாக" என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு மனமிரங்கிய பார்வதிதேவி, "அழகிய தடாக தீரத்தில் தேவ கன்னிகைகள் புண்ணியமான ஸ்ரீ வரலக்ஷ்மி விரதத்தை அனுஷ்டிப்பதை எப்பொழுது அவன் காண்கிறானோ அப்பொழுது அவன் சாபம் நீங்கி, பூர்வ ரூபத்தை அடைவான்" என்று கூறி அருளினாள்.

சாப வசத்தால் குஷ்டரோகியான சித்திரநேமி தடாக கரையை அடைந்து தேவ கன்னிகைகளை எதிர்பார்த்து வாசம் செய்யலானான். ஆவணி மாத சுக்லபட்ச வெள்ளிக்கிழமையன்று தேவ கன்னிகைகள் தடாக தீரத்தையடைந்து அங்கு பூஜை செய்யத் தொடங்கினார்கள். சித்திரநேமி அவர்களிடம் சென்று, "தாங்கள் செய்வது வரலக்ஷ்மி விரத பூஜைதானே" என்று கேட்க, அவர்கள் "ஆமாம். எதற்காக கேட்கிறாய்?" என்றனர். அதற்கு சித்திரநேமி "வரலக்ஷ்மி விரதத்தை எப்போது தேவகன்னிகைகள் அனுஷ்டிப்பதை பார்க்கின்றேனோ அப்பொழுது தான் சாபம் விமோசனம் அடைவேன் என்று பார்வதி தேவி அருளியிருக்கிறார். ஆகையால் தான் கேட்டேன்" என்றான்.

தேவகன்னிகைகள், "ஆம். நாங்கள் செய்வது வரலக்ஷ்மி பூஜைதான். இதை அனுஷ்டிக்கும் முறையை விளக்கமாக கூறுகிறோம் கேள்!" என்று கூறினார்கள்.

Credits: TamilBrahmins.com

இந்த விரதத்தை ஆவணி மாத சுக்லபட்ச வெள்ளிக்கிழமையில் செய்ய வேண்டும். இந்த விரதத்தை செய்யும் முன் வீட்டை முதலில் சுத்தம் செய்து கோலங்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்க வேண்டும். வியாழன் அன்று சந்தியில் ஈசான்ய மூலையில் சுவற்றில் வெள்ளையடித்து அம்மன் உருவத்தை வரைய வேண்டும். வரைய தெரியாதவர்கள் படத்தை, வாங்கி பூஜை செய்யலாம். அம்மன் திருஉருவத்தின் முன் அழகாய் கோலமிட்டு அதன் மேல் நுனி வாழை இலை அல்லது தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதில் அஷ்டதள பத்மம் அமைக்க வேண்டும்.

சுத்தமான தீர்த்தத்தால் நிரப்பிய பூர்ண கலசத்தின் மேல் தேங்காயை வைத்து அதன்மேல் அவரவர் சக்திக்கேற்ப (செப்பு, தங்கம், வெள்ளி, மஞ்சள்) லக்ஷ்மியின் முகத்தை ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். வரலக்ஷ்மியை புது வஸ்திரம், பூமாலை மற்றும் ஆபரணங்களால் அலங்கரிக்கவும்.

ஸர்வாலங்கார பூஷிதையான அம்பிகையை பக்தி சிரத்தையுடன் கரங்களில் ஏந்தி நிலை வாயிற்படிக்கு அருகே எடுத்துச் சென்று, மங்கள ஹாரத்தி எடுத்து வீட்டினுள் அழைத்து, இதற்கென விசேஷமாக அமைக்கப்பட்ட இடத்தில் ப்ரதிஷ்டை செய்து தூப தீப நைவேத்ய கற்பூர ஆரத்தியுடன் கூடிய ஸமஸ்த உபசாரங்களுடன் உபசரிக்க வேண்டும்.

மறுநாள் வெள்ளிக்கிழமையன்று பூஜை செய்ய வேண்டும்.

இவ்வாறாகக் கூறி அவர்கள் பூஜை செய்ய ஆரம்பித்தார்கள்.



சித்ரநேமி தேவ கன்னிகைகள் செய்த இந்த பூஜையை ச்ரத்தையுடனும், பக்தியுடனும் கண்ட பலனால், அவளுடைய குஷ்டரோகம் மறைந்து பழைய பொலிவு பெற்றாள்.

சித்ரநேமி எல்லாவற்றையும் அளிக்கும் இவ்விரதத்தை தானும் அனுஷ்டித்து விரதத்தின் முடிவில், சுவாஸினிகளுக்கு வாயன (தாம்பூலம்) தானம் அளித்தாள்.

பிறகு கைலாயம் சென்று, பார்வதி பரமேஸ்வரனை வணங்கி ஆசி பெற்றாள். அப்பொழுது பரமசிவன், “இன்று முதல் நீ இந்த கைலாயத்தில் ஸகல போகங்களையும் அனுபவிப்பாய். பிறகு இந்த விரதத்தின் மகிமையால் மோக்ஷத்தைப் பெறுவாய்” என்றருளினர்.

மேலும், இவ்வாறே பூலோகத்தில் சௌராஷ்டிர தேசத்தில் குண்டினம் என்ற நகரத்தில் சாருமதி என்ற பெண் இந்த வரலக்ஷ்மி விரதத்தை உபதேசிக்கப்பெற்று ஸகல ஸௌபாக்கியங்களையும் பெற்றாள்.

அதிலிருந்து பூலோகத்தில் இப்பூஜை அனுஷ்டிக்கப் பட்டு வருகிறது. இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள், கேட்பவர்கள் அனைவருமே வரலக்ஷ்மியின் அருளால் தனதான்ய அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெறுவர்.

குறிப்பு :

1. **தாமரை மலர்களால் அர்ச்சிப்பது விசேஷம்.**
2. **கலசத்திற்கு சிவப்பு பட்டு ரவிக்கைதுணி சாத்துவது விசேஷம்.**
3. **செவ்வரளி மலர்கள் விசேஷம்.**
4. **சர்க்கரை பொங்கல் நைவேத்யம் விசேஷம்.**
5. **தாழம்பூ விசேஷம்**

Credits: TamilBrahmins.com

## பூஜைக்கு தேவையான பொருட்கள்

1. மஞ்சள் பொடி
2. குங்குமம்
3. சந்தனம்
4. புஷ்பமாலை
5. எலுமிச்சை பழம்
6. தேங்காய்
7. அரிசி
8. பாக்கு
9. வஸ்த்ரம்
10. பால்
11. தேன்
12. பஞ்சாம்ருதம்
13. தயிர்
14. கற்பூரம்
15. நுனி வாழை இலை
16. வாழைப்பழம்
17. உதிரி புஷ்பம்
18. வெற்றிலை
19. ஊதுவத்தி
20. சாம்பிராணி
21. விளக்குத்திரி
22. நல்லெண்ணெய்
23. மாவிலைக்கொத்து
24. மஞ்சள் சரடுகள்
25. நெய்
26. நெல்
27. ஒரு ரூபாய் நாணயம்
28. தோரணம்
29. காதோலைகருகமணி
30. வஸ்த்ரம் (பாவாடை அல்லது ரவிக்கைத்துணி)
31. வெள்ளி அல்லது தங்க ஆபரணம்
32. அக்ஷதை (பச்சரிசியும், மஞ்சள் பொடியும் கலந்தது)
33. வாழைக்கன்று -2
34. தாமரைப்பூ
35. தாழம்பூ
36. தீப்பெட்டி



## பூஜைக்கு தேவையான பாத்திரங்கள்

1. பஞ்சபாத்திரம்/உத்தரணி
2. அர்க்யகிண்ணம்
3. ஆரத்தி தட்டு
4. தூபக்கால்
5. குத்துவிளக்கு
6. மணி
7. கலசம் / சொம்பு
8. தாம்பாளம்
9. கற்பூர தட்டு
10. பலகை / மணை
11. அம்மன் முகம்



## நைவேத்ய பதார்த்தங்கள்

1. உப்புகொழுக்கட்டை
2. வெல்லக்கொழுக்கட்டை
3. உளுந்து வடை
4. அப்பம்
5. பருப்புபாயாசம்
6. சர்க்கரை பொங்கல்
7. இட்லி
8. தேங்காய்
9. வாழைப்பழம்
10. பழவகைகள்



Credits: TamilBrahmins.com

● ஆடி அல்லது ஆவணி மாதம் பௌர்ணமிக்கு முன் வருகிற வெள்ளிக்கிழமையன்று வரலக்ஷ்மீ வ்ரத பூஜையைச் செய்ய வேண்டும்.


அம்மனை சுவற்றில் வரைதல்


மண்டபம் அலங்காரத்துடன்




பூஜை அறை அலங்காரத்துடன்

## பூஜை அறை அலங்காரம்

✡ பூஜைக்கு முதல் நாள் வியாழக்கிழமை அன்று வீட்டை சுத்தம் செய்து, மண்டபத்தை அலங்கரிக்க வேண்டும்.

✡ பூஜை அறையை மெழுகி கோலமிட்டு வெள்ளை அடிக்க வேண்டும்.

✡ அம்மனின் திருவுருவப்படத்தை சுவற்றில் அவரவர் குல ஸம்ப்ரதாயப்படி வரையவும் (அல்லது) படம் வைக்கவும்.

✡ பூஜை அறையில் மண்டபம் அமைத்து அலங்கரிக்க வேண்டும்.

✡ மண்டபத்தின் இருபக்கங்களிலும் வாழைக் கன்றை கட்டி, பூக்களால் தோரணங்கள் கட்டி அலங்காரம் செய்யவும்.

Credits: TamilBrahmins.com

# கலச அலங்காரம்



- முதலில் வீட்டை தோரணங்களால் அலங்கரிக்க வேண்டும்.
- கலசத்திற்கு உள்ளே *அரிசி நிரப்பிக் கொள்ளவும். (தங்கம்/வெள்ளி/செம்பு).
- பிறகு, அதில் எலுமிச்சம்பழம், வெற்றிலை பாக்கு, நாணயம் இவைகளை வைக்கவும்.

  * அவரவர் ஸம்ப்ரதாயப்படி அரிசி அல்லது தண்ணீர் நிரப்பிக் கொள்ளவும்.
- மாவிலைக் கொத்தையும், மஞ்சள் தடவிய தேங்காயையும் வைத்துச் சந்தன-புஷ்பங்களால் அலங்கரித்து, அதன்மேல் அம்மன் முகத்தை ப்ரதிஷ்டை செய்யவும்.
- அதன்மேல் வஸ்த்ரம் (ரவிக்கைத்துணி) அணிவிக்கவும்.





- தரையை சுத்தம் செய்து கோலமிட்டு நுனி வாழை இலை / தாம்பாளத்தை வைத்து அதில் அரிசியை பரப்பி அஷ்டதள பத்மம் அமைக்கவும்.
- அம்மன் இருக்கும் கலசத்தை வாயிற்படி அருகே எடுத்துச் சென்று மங்கள ஹாரத்தி எடுத்து பாட்டுப்பாடி வீட்டினுள் அழைத்து வந்து அம்மனுக்காக ப்ரத்யேகமாக அலங்கரித்து வைத்திருக்கும் இடத்தில் வைக்கவும்.
- மறுநாள் வெள்ளிக்கிழமை சிறப்பாக பூஜை செய்ய வேண்டும்.

இந்த புத்தகத்தில் ச' எழுத்து வரும் இடங்களிலெல்லாம் அதை (श, Sha) என்ற உச்சரிப்பில் மட்டுமே உச்சரிக்க வேண்டும். ஏனெனில் ஸம்ஸ்க்ருத श (Sha) எழுத்திற்கு நிகரான எழுத்து தமிழில் இல்லை.

உதாரணம்:

| | | |
|---|---|---|
| शंकरा | - Shankara | – ச'ங்கரா |
| शिव | - Shiva | – சி'வ |
| शास्त्रम् | - Shastram | – சா'ஸ்த்ரம் |

Credits: TamilBrahmins.com

# ஸ்ரீவரலக்ஷ்மீ ஹாரத்தி பாடல்கள்

ராகம்: மாயாமாளவ கௌளை    தாளம்: சதுஸ்ரம்

லக்ஷ்மீ ராவே மா இண்டிகி
க்ஷீராப்தி புத்ரி வரலக்ஷ்மி ராவே மா இண்டிகி
லக்ஷ்மி ராவேமா இண்டிகி ராஜிதமுக நெலகொன்ன
ஸுக்ஷ்மமுக மோக்ஷமிச்சு ஸுந்தரி ப்ருந்தாவனதாரி
(லக்ஷ்மீ)

குங்கும பச்சகஸ்தூரி கோரிக தோநூ கோரோ ஜனமு
கோரு ஐவ்வா ஜுலு அங்கித முகனே அலரு கந்தமு
சூல கந்தம் ஸந்த முக ஸாம்ப்ராணி தூபமு
மாதா நீகு ப்ரீதிக ப்ரக்யாதிகா ஸமர்ப்பிந்து நம்மா
(லக்ஷ்மீ)

பசுபு அக்ஷதலு பரிமள கந்தமு
பஞ்ச பில்வமுலு பூர்ண கலச'மு
மாதா நீகு ப்ரீதிக ப்ரக்யாதிகா ஸமர்ப்பிந்து நம்மா
(லக்ஷ்மீ)

குண்டு மல்லெ லமர கானு தண்டிக
சாமந்தி பூலு மேலைன பாரி ஜாதமு
மாதா நீகு ப்ரீதிக ப்ரக் யாதிகா ஸமர்ப்பிந்து நம்மா
(லக்ஷ்மீ)

அந்த முக ஜரிகஞ்சு பஞ்ச குந்த நம்பு
பச்சனி ரவிக சந்தடிக சாம்பிராணி தூபமு
மாதா நீகு ப்ரீதிக ப்ரக்யாதிகா ஸமர்ப்பிந்து நம்மா
(லக்ஷ்மீ)



# பூர்வாங்க பூஜைகள்

## தீப மந்த்ரம்



(விளக்கை ஏற்றி வைத்து தீபத்தை பார்த்து இந்த மந்திரத்தை சொல்லி புஷ்பம் போடவும்.)

தீபஜ்யோதி: பரம் ப்ரஹ்ம
தீபஜ்யோதிர் ஜனார்த்தன: |
தீபோ ஹரது மே பாபம்
தீபஜ்யோதிர் நமோஸ்து தே ||

## ஆசமனம்

(உத்தரணியில் தீர்த்தம் எடுத்து வலது உள்ளங்கையில் விட்டுக் கொண்டு கீழ்கண்ட மந்திரம் சொல்லி மூன்று முறை உட் கொள்ளவும்.)



ஓம் அச்யுதாய நம:
ஓம் அனந்தாய நம:
ஓம் கோவிந்தாய நம:

## குரு த்யானம்

(தியானம் செய்யவும்.)



குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு:
குருர்தேவோ மஹேச்'வர: |
குருஸ் ஸாக்ஷாத் பரப்ரஹ்ம
தஸ்மை ஸ்ரீகுரவே நம: ||

Credits: TamilBrahmins.com

# கணபதி த்யானம்

வலது கையில் அக்ஷதை எடுத்துக்கொண்டு, 5 முறை குட்டிக் கொண்டு கீழ்கண்ட மந்திரம் சொல்லவும்.



சு’க்லாம்பரதரம் விஷ்ணும்
ச’சி’வர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சா’ந்தயே ||

# ஆஸன பூஜை





(பூஜை ஆரம்பிக்கும் முன் நாம் அமரும் ஆஸனம் / பலகையை சுத்தப் படுத்துவதற்காக, மந்திரங்களை சொல்லி தீர்த்தம் தெளித்து பிறகு அமர்ந்து கொள்ளவும். )

ப்ருதிவ்யா : மேருப்ருஷ்ட்டருஷி:
ஸுதலம் ச்சந்த: கூர்மோதேவதா |
ப்ருத்வி த்வயா த்ருதா லோகா
தேவி த்வம் விஷ்ணுனா த்ருதா ||
த்வம் ச தாரய மாம் தேவி
பவித்ரம் குரு ஆஸனம் ||



# கண்டா பூஜை



(இந்த பூஜையை நாம் தடங்கலின்றி முடிப்பதற்கு, தேவதைகளை, கீழ்காணும் மந்திரங்களைச் சொல்லி, மணியடித்து அழைக்கிறோம்.)

ஆகமார்த்தம் து தேவானாம்
கமநார்த்தம் து ரக்ஷஸாம் |
கண்டாரவம் கரோம்யாதௌ
தேவதாஹ்வான லாஞ்ச்சனம் ||

# ஆத்ம பூஜை



(மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை தியானித்து கீழ்காணும் மந்திரங்களைச் சொல்ல வேண்டும்.)

தேஹோ தேவாலய: ப்ரோக்த:
ஜீவோ தேவ: ஸநாதன: |
த்யஜேத் அஜ்ஞான நிர்மால்யம்
ஸோஹம்பாவேன பூஜயேத் ||



Credits: TamilBrahmins.com

# ஸ்ரீ விக்னேச்’வர பூஜை

## (மஞ்சள் பிள்ளையார்)

## ப்ரார்த்தனை



(ஒவ்வொரு பூஜைக்கும் முன்னால் விக்னேச்வர பூஜையை செய்ய வேண்டும். மஞ்சள் பிள்ளையாருக்கு கீழ் கண்ட மந்திரங் களைச் சொல்லி ஆவாஹனம் (விக்னேச்வரரை வரவழைத்தல்) செய்து, புஷ்பம், அக்ஷ தையை போடவும்.)

வேதமந்திரங்களை ஸ்வரத்துடன் சொல்பவர் கள் மட்டுமே கீழ்கண்ட மந்திரங்களை சொல்லவும்.)

**கணானாம் த்வாகணபதிகும் ஹவாமஹே**
**கவிம் கவீநாம் உபமச்’ரவஸ்தமம் |**
**ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத**
**ஆந: ச்’ருண்வந்நூதிபிஸ் ஸீத ஸாதனம் ||**
**அஸ்மின் ஹரித்ராபிம்பே விக்னேச்’வரம் த்யாயாமி**
**விக்னேச்’வரம் ஆவாஹயாமி ||**

(மற்றவர்கள் கீழ்க்கண்ட மந்திரத்தை சொல்லலாம்.)

**ஏகதந்தாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி |**
**தந்நோ தந்தி: ப்ரசோதயாத் ||**

### ஆவாஹனம்



**அஸ்மின் ஹரித்ராபிம்பே ஸுமுகம் |**
**மஹாகணபதிம் த்யாயாமி, ஆவாஹயாமி ||**

(அக்ஷதையும், புஷ்பமும் போடவும்.)



**ஆஸனம் ஸமர்ப்பயாமி |**



(சிறிதளவு அக்ஷதை ஸமர்ப்பிக்கவும். மஞ்சள் பிள்ளையாருக்கு ஆஸனம் அளித்து உபசாரம் செய்யும்மந்திரம்.)

**பாத்யம் ஸமர்ப்பயாமி |**



(அர்க்ய பாத்திரத்தில் தீர்த்தம் விட வும். மஞ்சள் பிள்ளையாரின் பாதங் களை அலம்ப நீர் வார்க்கும் போது சொல்லப்படும் மந்திரம்.)

**அர்க்யம் ஸமர்ப்பயாமி |**



(அர்க்ய பாத்திரத்தில் தீர்த்தம் விடவும். உள்ளங்கைகளை சுத்தம் செய்து கொள்ள நீர் கொடுப்பதற்காக சொல்லும் மந்திரம். )

**ஆசமனீயம் ஸமர்ப்பயாமி |**



(தீர்த்தம் எடுத்து 3 தடவை அர்க்ய பாத்திரத்தில் விடவும். உள் உடம்பை சுத்திகரிப்பதற்கு சொல்லும் மந்திரம்.)

**ஸ்னானம் ஸமர்ப்பயாமி ஸ்னானானந்தரம் |**
**ஆசமனீயம் ஸமர்ப்பயாமி |**



(மஞ்சள் பிள்ளையார்மீது சிறிது நீரை தெளிக்கவும்.)

**வஸ்த்ர–அலங்கார–உபவீதார்த்தம்**
**அக்ஷதான் ஸமர்ப்பயாமி |**



(வஸ்திரங்கள், ஆபரணங்கள், உப வீதம் ஆகியவற்றை ஸமர்ப்பிப்பதற்கான மந்திரங்கள். இவற்றுக்குப் பதிலாக அட்சதையை ஸமர்ப்பிக்கலாம்.)

Credits: TamilBrahmins.com

கந்தான் ஸமர்ப்பயாமி, கந்தாஸ்யோபரி |

ஹரித்ராகுங்குமம் ஸமர்ப்பயாமி |

(மஞ்சள் பிள்ளையாருக்கு சந்தனம், குங்குமம் இடவும்.)



புஷ்பை: பூஜயாமி |

புஷ்பம் போடவும்.



## அர்ச்சனை

(மஞ்சள் பிள்ளையாரை பல பெயர்களில் புஷ்பங்களால் அர்ச்சனை செய்யவும்.)

ஓம் ஸுமுகாய நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம:
ஓம் கஜகர்ணகாய நம:
ஓம் லம்போதராய நம:
ஓம் விகடாய நம:
ஓம் விக்னராஜாய நம:
ஓம் விநாயகாய நம:
ஓம் தூமகேதவே நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் ஃபாலசந்த்ராய நம:
ஓம் கஜானனாய நம:



ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் சூர்ப்ப கர்ணாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:
ஓம் மஹாகணபதயே நம:



நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

தூபார்த்தம், தீபார்த்தம்,
அக்ஷதான் ஸமர்ப்பயாமி.

ஊதுபத்தி/சாம்பிராணி, தீபம் காண்பிக்கவும். அல்லது அக்ஷதை ஸமர்ப்பிக்கவும்.



## நிவேதன மந்த்ரங்கள்

(உத்தரணியில் தீர்த்தம் எடுத்து கீழ்க் கண்ட மந்திரம் சொல்லி, தீர்த்தத்தை நைவேத்திய தட்டின் இடப்புறத்திலிருந்து வலப்புறமாக சுற்றி கீழே விட வேண்டும்.)

ஓம் பூர்புவஸ்ஸுவ:



(தீர்த்தத்தை நைவேத்யங்களின் மேல் தெளிக்கவும்.)

தத்ஸவிதுர்வரேண்யம்
பர்கோதேவஸ்ய தீமஹி |
தியோ யோ ந: ப்ரசோதயாத் |



Credits: TamilBrahmins.com



பிரசாதத்தட்டின் மீது சிறிது நீர் தெளித்து, அதைச் சுற்றிலும் நீர் வார்க்க வேண்டும். இதை வலமிருந்து இடமாகச் செய்ய வேண்டும்.

**தேவஸவித: ப்ரஸுவ | ஸத்யம் த்வர்த்தேன பரிஷிஞ்சாமி |**



(தீர்த்தத்தை எடுத்து அர்க்ய பாத்திரத்தில் விடவும்.)

**அம்ருதோபஸ்தரணமஸி**



(பிறகு கீழ்கண்ட மந்திரத்தை சொல்லி, ஒவ்வொரு முறையும் "ஸ்வாஹா" என்று சொன்ன பிறகு படத்தில் உள்ளது போல் ஸ்வாமியின் பக்கம் கையால் காண்பித்து நைவேத்யம் பண்ணவும்.)

**ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபானாய ஸ்வாஹா, ஓம் வ்யானாய ஸ்வாஹா, ஓம் உதானாய ஸ்வாஹா, ஓம் ஸமானாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா மஹா கணபதயே நம: கதளீஃபலம் நிவேதயாமி**



(பிரசாதத்தட்டின் மீது சிறிது நீர் தெளித்து அதைச் சுற்றிலும் நீர் வார்க்க வேண்டும். இதை வலமிருந்து இடமாகச் செய்ய வேண்டும். படத்தில் உள்ளபடி.)

**மத்யே மத்யே பானீயம் ஸமர்ப்பயாமி**





(உத்தரணி நீரை அர்க்ய பாத்திரத்தில் விடவும்.)

**அம்ருதோபஸ்தரணமஸி**



(தாம்பூலத்தின் மீது உத்தரணி நீரை ஊற்றவும்.)

**தாம்பூலம் ஸமர்ப்பயாமி**

(கற்பூரம் ஏற்றி, மஞ்சள் பிள்ளையார் பிம்பத்திற்கு காண்பித்து இந்த மந்திரத்தை சொல்லவும்.)



**கற்பூர நீராஜனம் ஸந்தர்சயாமி**
**நீராஜனானந்தரம்**
**ஆசமனீயம் ஸமர்ப்பயாமி.**

## ப்ரார்த்தனை

**வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா**

(பிரதட்சிண நமஸ்காரம் செய்யவும்.)



Credits: TamilBrahmins.com

# வரலக்ஷ்மி பூஜை

## ப்ரார்த்தனை



சு'க்லாம்பரதரம் விஷ்ணும்
ச'சி'வர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சா'ந்தயே ||

## ஸங்கல்பம்



(ஸங்கல்பம் செய்வதற்கு முன்னால், அவ்வப்பொழுது மாறுகின்ற வருஷம், ருது, மாசம், அயனம், பக்ஷம் இவற்றை பஞ்சாங்கம் பார்த்து தெரிந்துகொண்டு அதற்கேற்ப சொல்லிக்கொள்ளவும்.

வலது கையில் அக்ஷதை எடுத்து, கையை மூடிக் கொண்டு, இடது கையுடன் சேர்த்து வலது தொடையில் வைத்துக் கொண்டு கீழ்கண்ட மந்திரத்தை சொல்லவும்.)

மமோபாத்த, ஸமஸ்த, துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்'வர ப்ரீத்யர்த்தம், சு'பே, சோ'பநே, முஹூர்த்தே, ஆத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே, ச்'வேத வராஹ கல்பே, வைவஸ்வத மந்வந்தரே, அஷ்டா விம்ச'தி தமே, கலியுகே, ப்ரதமே பாதே, ஜம்பூத்வீபெ, பாரத வர்ஷே, பரதகண்டே, மேரோ: தக்ஷிணே பார்ச்'வே ச'காப்தே, அஸ்மிந்



வர்த்தமாநே வ்யாவ ஹாரிகே, ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத் ஸராணாம் மத்யே....... நாம ஸம்வத்ஸரே, (வருஷத்தின் பெயர்) தக்ஷணாயனே, ........ ருதௌ (காலத்தின் பெயர்) ............ மாஸே (மாதத்தின் பெயர்) சு'க்லபக்ஷே ...... சு'பதிதௌ (திதியின் பெயர்) ....... வாஸர யுக்தாயாம் (வாரத்தின் பெயர்) ........ நக்ஷத்ர யுக்தாயாம் (நக்ஷத்திரத்தின் பெயர்) சு'பயோக சு'பகரண ஏவங்குண விசே'ஷண விசி'ஷ்டாயாம் சு'பதிதௌ, அஸ்மாகம் ஸகுடும்பானாம் க்ஷேமஸ் தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய, ஐச்வர்யாணாம் அபிவருத்யர்த்தம், தீர்க்க ஸௌமாங்கல்ய அவாப்த்யர்த்தம், அரோக த்ருடகாத்ரதா ஸித்யர்த்தம், ஸ்ரீவரலக்ஷ்மீ ப்ரீத்யர்த்தம், ஸ்ரீவரலக்ஷ்மீ ப்ரஸாத ஸித்யர்த்தம், யதாச'க்தி த்யான ஆவாஹனாதி ஷோட சோ'பசாரை: ஸ்ரீவரலக்ஷ்மீ பூஜாம் கரிஷ்யே |

(என்று கூறி அக்ஷதையை வடக்கு பக்கமாகப் போடவும்.)

## விக்னேச்'வர யதாஸ்தானம்

(உத்யாபனம்)

## ப்ரார்த்தனை

சு'க்லாம்பரதரம் விஷ்ணும் ச'சி'வர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப
சா'ந்தயே ||

Credits: TamilBrahmins.com

**அப உபஸ்ப்ருச்'ய**

உத்தரணி தீர்த்தத்தால் கைகளை அலம்பவும்.)

**"விக்னேச்'வரம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி"**

(என்று சொல்லி, மஞ்சள் பிள்ளையார் மீது அக்ஷதை போட்டு, வடக்கு திசையில் நகர்த்த வேண்டும்.)



**கணபதி ப்ரஸாதம் சி'ரஸா க்ருஹ்ணாமி**

ப்ரஸாத தட்டை கண்களில் ஒற்றிக் கொண்டு அர்ச்சனை செய்த பூவை தலையில் வைத்துக் கொள்ளவும்.

## கண்டா பூஜை

கீழ்கண்ட மந்திரம் சொல்லி, மணி அடிக்கவும்.



**ஆகமார்த்தம் து தேவானாம்**
**கமநார்த்தம் து ரக்ஷஸாம் |**
**கண்டாரவம் கரோம்யாதௌ**
**தேவதாஹ்வானலாஞ்ச்சனம் ||**

## கலச' பூஜை

(பஞ்சபாத்திரத்தை நீரால் நிரப்பி அதில் சில பூக்களைப் போடவும். சந்தனம் மற்றும் குங்குமத்தால் அதை அலங்கரிக்கவும். அதன் மேல்பாகத்தை வலது உள்ளங்கையால் மூடிக் கொண்டு பின்வரும் மந்திரத்தை சொல்லவும். இதைச் சொல்வதன் மூலம் புனித நதிகளான கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதை, காவேரி போன்ற வற்றின் நீர்கள், பஞ்சபாத்திரத்து நீரில் கலப்பதாக ஐதீகம். இந்த மந்திரத்தை சொன்ன பிறகு அப்புனித நீரை பூஜை அறை முழுவதும் தெளிக்க





வேண்டும். பிறகு தன்மீதும் அதை தெளித்துக் கொள்ள வேண்டும்.)

**கலச'ஸ்ய முகே விஷ்ணு:**
**கண்டே ருத்ர: ஸமாச்'ரித: |**
**மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்மா**
**மத்யே மாத்ருகணா: ஸ்ம்ருதா: ||**
**குக்ஷௌ து ஸாகரா: ஸர்வே**
**ஸப்தத்வீபா வஸுந்தரா |**
**ருக்வேதோ(அ)த யஜுர்வேத:**
**ஸாமவேதோ(அ)ப்யதர்வண: ||**
**அங்கைச்'ச ஸஹிதா: ஸர்வே**
**கலசா'ம்பு ஸமாச்'ரிதா: |**
**ஆயாந்து தேவபூஜார்த்தம்**
**துரிதக்ஷயகாரகா: ||**
**கங்கே ச யமுனே சைவ**
**கோதாவரி ஸரஸ்வதி |**
**நர்மதே ஸிந்து காவேரி**
**ஜலே(அ)ஸ்மின் ஸந்நிதிம் குரு ||**

## த்யானம்

(வரலக்ஷ்மி அம்மனுக்கு கீழ்கண்ட மந்திரத்தை சொல்லி புஷ்பம், அக்ஷதை போட்டு, அம்மனை தியானிக்கவும்.)



**லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ரராஜ**
**தநயாம் ஸ்ரீரங்க தாமேச்'வரீம்**
**தாஸீபூத ஸமஸ்த தேவவநிதாம்**
**லோகைக தீபாங்குராம் |**

Credits: TamilBrahmins.com

ஸ்ரீமந்மந்த கடாக்ஷலப்த விபவ
ப்ரஹ்மேந்த்ர கங்காதராம்
த்வாம் த்ரைலோக்யகுடும்பினீம்
ஸரஸிஜாம் வந்தே முகுந்தப்ரியாம் ||

யா ஸா பத்மாஸனஸ்தா
விபுலகடிதட பத்மபத்ராயதாக்ஷீ |
கம்பீராவர்த்தநாபி: ஸ்தனபரநமிதா
சு’ப்ர வஸ்த்ரோத்தரீயா ||

லக்ஷ்மீர் திவ்யைர் கஜேந்த்ரை: மணிகண
கசிதை: ஸ்நாபிதா ஹேமகும்பை: |
நித்யம் ஸா பத்மஹஸ்தா மம வஸது
க்ருஹே ஸர்வ மாங்கள்ய யுக்தா||

பத்மாஸனாம் பத்மகராம் பத்மமாலா விபூஷிதாம் |
க்ஷீரவர்ணஸமம் வஸ்த்ரம் ததாநாம் ஹரிவல்லபாம் ||
பாவயே பக்தியோகேன கலசே’(அ)ஸ்மின்
மநோஹரே|

அஸ்மிந் கலசே’ ஸ்ரீவரலக்ஷ்மீம் த்யாயாமி ||

பாலபாநு ப்ரதீகாசே’ பூர்ணசந்த்ர நிபாநநே |
ஸூத்ரே(அ)ஸ்மிந் ஸுஸ்திதா
பூத்வா ப்ரயச்ச பஹூலாந்வராந் ||
தோரகம் ஸ்தாபயாமி ||

(கையில் கட்டிக் கொள்ளப் போகும் நோன்புச் சரட்டையும் புஷ்பம் முடித்து கலசத்திற்கு மேல் அலங்காரமாக சாற்றவும்.)



## வரலக்ஷ்மி பூஜை



Credits: TamilBrahmins.com

# ஆவாஹனம்

ஸர்வமங்கள மாங்கல்யே

விஷ்ணுவக்ஷஸ்த்தலாலயே |

ஆவாஹயாமி தேவி த்வாம் அபீஷ்ட ஃபலதா பவ ||

அஸ்மின் கலசே' ஸ்ரீ வரலக்ஷ்மீம் ஆவாஹயாமி ||

(புஷ்பம், அக்ஷதைகளை ஸமர்ப்பிக்கவும்)

# ப்ராணப்ரதிஷ்டா

ஆவாஹன மந்திரத்தைச் சொல்லி தேவியை வரவேற்று உபசரித்தபின், கீழ்க்காணும் ப்ராணப் பிரதிஷ்டை எனும் மந்திரத்தை கூறுவது அவசியம். அதன் மூலம் தேவி கலசத்திற்குள் எழுந்தருளுவதாக ஐதீகம்.

ஓம் அஸ்ய ஸ்ரீவரலக்ஷ்மீ ப்ராணப்ரதிஷ்டா மஹாமந்த் ரஸ்ய, ப்ரஹ்ம விஷ்ணு மஹேச்'வரா:, ரிஷய:, ரிக் யஜுஸ்ஸாம அதர்வாணி ச்சந்தாம்ஸி || ஸகல ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரிணீ





ப்ராண ச'க்தி: பரா தேவதா | ஆம் பீஜம், ஹ்ரீம் ச'க்தி: க்ரோம் கீலகம் ஸ்ரீவரலக்ஷ்மீ ப்ராண ப்ரதிஷ்டார்த்தே ஜபே விநியோக:|| ஆம் அங்குஷ்ட்டாப்யாம் நம: ஹ்ரீம் தர்ஜநீப்யாம் நம: க்ரோம் மத்ய மாப்யாம் நம: ஆம் அனாமிகாப்யாம் நம:, ஹ்ரீம் கனிஷ்ட்டிகாப்யாம் நம:, க்ரோம் கரதலகர ப்ருஷ்ட்டாப்யாம் நம: ஆம் ஹ்ருதயாய நம:, ஹ்ரீம் சி'ரஸே ஸ்வாஹா, க்ரோம் சி'காயை வஷட், ஆம் கவசாய ஹும் ஹ்ரீம் நேத்ரத்ரயாய வௌஷட், க்ரோம் அஸ்த்ராய ஃபட், பூர்ப்பு வஸ்ஸுவரோமிதி திக்பந்த: ||

# த்யானம்

ரக்தாம்போதிஸ்த்த போதோல்லஸ தருண

ஸரோஜாதிரூடா கராப்ஜை:

பாச'ம் கோதண்ட மிக்ஷுத்பவ மளிகுண

மப்யங்குச'ம் பஞ்சபாணான் |

பிப்ராணாஸ்ருக் கபாலம் த்ரினயன

லஸிதா (ஆ) பீன வக்ஷோருஹாட்யா

தேவீ பாலார்க்கவர்ணா பவது

ஸுககரீ ப்ராணச'க்தி: பரா ந: ||

Credits: TamilBrahmins.com

ஆம் ஹ்ரீம் க்ரோம் | க்ரோம் ஹ்ரீம் ஆம் | யம், ரம், லம், வம், ச’ம், ஷம், ஸம், ஹம் | ஹம்ஸ: ஸோஹம், ஸோஹம் ஹம்ஸ: | அஸ்யாம் மூர்த்தௌ வரலக்ஷ்ம்யா: ப்ராணஸ்திஷ்டது | வரலக்ஷ்ம்யா: ஜீவஸ்திஷ்டது | ஸர்வேந்த்ரியாணி வாங்மனஸ்-த்வக்சக்ஷு: ஸ்ரேத்ர - ஜிஹ்வா-க்ராண-பாணி-பாத-பாயூபஸ்தானி இஹாகத்ய ஸுகம் சி’ரம் திஷ்டந்து ஸ்வாஹா |

(அக்ஷதை, புஷ்பம், ஜலம் இவை மூன்றையும் பிம்பத்தின் மீது போடவும்.)

அஸுனீதே புனரஸ்மாஸு சக்ஷு: புன: ப்ராணமிஹ நோ தேஹிபோகம் | ஜ்யோக் பச்’யேம ஸூர்ய முச்சரந்த மனுமதே ம்ருளயா ந: ஸ்வஸ்தி || பஞ்ச’தசஸம் ஸ்காரார்த்தம் பஞ்சதச’வாரம் ப்ரணவஜபம் க்ருத்வா || (ஓம்-15 முறை சொல்லவும்) ப்ராணான் ப்ரதிஷ்டாபயாமி |

(மந்திரம் சொன்ன பிறகு பால், தேன், நெய் கலந்து ஒரே பாத்திரத்தில் ப்ராண சக்திக்கு நிவேதனம் செய்யவும்.)

ஆவாஹிதோ பவ | ஸ்த்பதாபிதோ பவ | ஸன்னிஹிதோ பவ | ஸன்னிருத்தோ பவ | அவகுண்டிதோ பவ | ஸுப்ரீதோ பவ | ஸுப்ரஸன்னோ பவ | ஸுமுகோ பவ | வரதோ பவ | ப்ரஸீத ப்ரஸீத ||

ஸ்வாமின் ஸர்வஜகன்நாத யாவத் பூஜாவஸானகம் |
தாவத் த்வம் ப்ரீதி பாவேன பிம்பே(அ)ஸ்மின்
ஸன்னிதிம் குரு ||



# ஷோடச’ உபசாரங்கள்



அநேக ரத்னகசிதம்
க்ஷீரஸாகர ஸம்பவே |
ஸ்வர்ண ஸிம்ஹாஸநம் தேவி
ஸ்வீகுருஷ்வ ஹரிப்ரியே ||
ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: ஆஸனம் ஸமர்ப்பயாமி

(சிறிதளவு அக்ஷதை ஸமர்ப்பிக்கவும்.)



கங்காதி ஸரிதாநீதம்
கந்தபுஷ்ப ஸமன்விதம் |
பாத்யம் ததாமி தே தேவி
ப்ரஸீத பரமேச்’வரி ||
ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: பாத்யம் ஸமர்ப்பயாமி

(அர்க்ய பாத்திரத்தில் தீர்த்தம் விடவும்.)



கங்காநதி ஸமாநீதம்
ஸுவர்ண கலச’ஸ்திதம் |
க்ருஹாணார்க்யம் மயா தத்தம்
புத்ர பௌத்ர ஃபலப்ரதே ||
ஸ்ரீ வரலக்ஷ்ம்யை நம: அர்க்யம் ஸமர்ப்பயாமி

(அர்க்ய பாத்திரத்தில் தீர்த்தம் விடவும்.)



ப்ரஸன்னம் சீ’தலம் தோயம்
ப்ரஸன்ன முகபங்கஜே |
க்ருஹாணாசமநார்த்தாய
கருடத்வஜ வல்லபே ||
ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: ஆசமனீயம் ஸமர்ப்பயாமி

(தீர்த்தம் எடுத்து 3 தடவை அர்க்ய பாத்திரத்தில் விடவும்.)

Credits: TamilBrahmins.com

மஹாலக்ஷ்மி மஹாதேவி
மத்வாஜ்ய ததிஸம்யுதம் |
மதுபர்க்கம் க்ருஹாணேதம்
மதுஸூதன வல்லபே ||



ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: மதுபர்க்கம் ஸமர்ப்பயாமி

(தேன் கலந்த தயிரை ஸமர்ப்பிக்கவும்)

பயோததி க்ருதைர்யுக்தம்
ச'ர்க்கரா மதுஸம்யுதம் |
பஞ்சாம்ருதம் க்ருஹாணேதம்
வரலக்ஷ்மி நமோஸ்து தே ||



ஸ்ரீ வரலக்ஷ்ம்யை நம: பஞ்சாம்ருதம் ஸமர்ப்பயாமி

(புஷ்பத்தால் பஞ்சாம்ருதத்தை ப்ரோக்ஷணம் செய்யவும்)

ஹேமகும்ப ஸ்திதம் ஸ்வச்சம்
கங்காதி ஸரிதாஹ்ருதம் |
ஸ்நாநார்த்தம் ஸலிலம் தேவி
க்ருஹ்யதாம் ஸாகராத்மஜே ||



ஸ்ரீ வரலக்ஷ்ம்யை நம: ஸ்னானம் ஸமர்ப்பயாமி

(புஷ்பத்தால் தீர்த்தத்தை ப்ரோக்ஷணம் செய்யவும்)

ஸ்நானாநந்தரம்
ஆசமனீயம் ஸமர்ப்பயாமி

(உத்தரணியால் தீர்த்தத்தை ப்ரோக்ஷிக்கவும்.)





திவ்யாம்பரயுகம் ஸூக்ஷ்மம்
கஞ்சுகஞ்ச மநோஹரம் |
வரலக்ஷ்மி மஹாதேவி
க்ருஹாணேதம் மயார்ப்பிதம் ||



ஸ்ரீ வரலக்ஷ்ம்யை நம: வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி

(வஸ்த்ரம் அல்லது அக்ஷதை ஸமர்ப்பிக்கவும்)

மாங்கள்ய மணி ஸம்யுக்தம்
முக்தாவித்ரும ஸம்யுதம் |
தத்தம் மங்கள ஸூத்ரஞ்ச
க்ருஹாண ஹரிவல்லபே ||



ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: கண்ட ஸூத்ரம்
ஸமர்ப்பயாமி

(கருகமணி பனைஓலை / அக்ஷதை போடவும்.)

ரத்ன தாடங்க கேயூர
ஹார கங்கண பூஷிதே |
பூஷணாதி மஹார்ஹாணி
க்ருஹாண கருணாநிதே ||



ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: ஆபரணானி ஸமர்ப்பயாமி

(ஆபரணங்கள் அணிவிக்கவும் / அக்ஷதை போடவும்.)

கற்பூர சந்தநோபேதம்
கஸ்தூரீ குங்குமான்விதம் |
ஸர்வ கந்தம் க்ருஹாணாத்ய
ஸர்வ மங்களதாயினி ||



ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: கந்தான் தாரயாமி
கந்தோபரி ஹரித்ரா சூர்ணம் ஸமர்ப்பயாமி

(சந்தனமிடவும், குங்குமம் இடவும்)

Credits: TamilBrahmins.com

சாலிஜாதான் சந்த்ரவர்ணான்
ஸ்நிக்த மௌக்திக ஸந்நிபான் |
அக்ஷதான் தேவி க்ருஹ்ணீஷ்வ
பங்கஜாக்ஷஸ்ய வல்லவே ||



ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: அக்ஷதான் ஸமர்ப்பயாமி

(அக்ஷதையை ஸமர்ப்பிக்கவும்)

மந்தார பாரிஜாதாப்ஜை:
கேதக்யுத்பல பாடலை: |
மல்லிகா ஜாதிவகுளை:
புஷ்பைஸ் த்வாம் பூஜயாம்யஹம் ||



ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: புஷ்பை: பூஜயாமி

(புஷ்பங்களை ஸமர்ப்பிக்கவும்)

## அங்க பூஜை

(புஷ்ப அக்ஷதைகளை ஸமர்ப்பிக்கவும்)

ஓம் வரலக்ஷ்ம்யை நம: பாதௌ பூஜயாமி (கால்)

ஓம் மஹாலக்ஷ்ம்யை நம: குல்ஃபௌ ” (கணுக்கால்)

ஓம் இந்திராயை நம: ஜங்க்கே ” (முழங்கால்)

ஓம் சண்டிகாயை நம: ஜாநுநீ ” (முட்டி)

ஓம் க்ஷீராப்தி தனயாயை நம: ஊரூ ” (தொடை)

ஓம் பீதாம்பர தாரிண்யை நம: கடிம் ” (இடுப்பு)

ஓம் ஸாகரஸம்பவாயை நம: குஹ்யம் ” (மர்மம்)

ஓம் நாராயண ப்ரியாயை நம: நாபிம் ” (தொப்புள்)

ஓம் ஜகத்குக்ஷ்யை நம: குக்ஷிம் ” (வயிறு)

ஓம் விச்'வஜனந்யை நம: வக்ஷ: ” (மார்பு)

ஓம் ஸூஸ்தன்யை நம: ஸ்தநௌ ” (மார்பு)

ஓம் கம்புகண்ட்யை நம: கண்டம் ” (கழுத்து)



ஓம் ஸூந்தர்யை நம: ஸ்கந்தௌ ” (தோள்)

ஓம் பத்மஹஸ்தாயை நம: ஹஸ்தான் ” (கைகள்)

ஓம் பஹுப்ரதாயை நம: பாஹூன் ” (புஜதண்டம்)

ஓம் சந்த்ரவதநாயை நம: வக்த்ரம் ” (வாய்)

ஓம் சஞ்சலாயை நம: சிபுகம் ” (முகவாய்கட்டை)

ஓம் பிம்போஷ்ட்யை நம: ஓஷ்டம் ” (உதடு)

ஓம் அநகாயை நம: அதரம் ” (உதடு)

ஓம் ஸூகபோலாயை நம: கபோலௌ ” (கன்னம்)

ஓம் ஃபலப்ரதாயை நம: ஃபாலம் ” (நெற்றி)

ஓம் நீலாலகாயை நம: அலகான் ” (வகிடு)

ஓம் சி'வாயை நம: சி'ர ” (தலை)

ஓம் ஸர்வமங்களாயை நம:
ஸர்வாண்யங்கானி ” (முழுதும்)



Credits: TamilBrahmins.com

## ஸ்ரீலக்ஷ்மீ அஷ்டோத்தரச’த நாமாவளி

ஓம் ப்ரக்ருத்யை நம:
ஓம் விக்ருத்யை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ஸர்வபூதஹித ப்ரதாயை நம:
ஓம் ச்’ரத்தாயை நம:
ஓம் விபூத்யை நம:
ஓம் ஸுரப்யை நம:
ஓம் பரமாத்மிகாயை நம:
ஓம் வாசே நம:
ஓம் பத்மாலயாயை (10) நம:
ஓம் பத்மாயை நம:
ஓம் சு’சயே நம:
ஓம் ஸ்வாஹாயை நம:
ஓம் ஸ்வதாயை நம:
ஓம் ஸுதாயை நம:
ஓம் தந்யாயை நம:
ஓம் ஹிரண்மய்யை நம:
ஓம் லக்ஷ்ம்யை நம:
ஓம் நித்யபுஷ்டாயை நம:
ஓம் விபாவர்யை (20) நம:
ஓம் அதித்யை நம:
ஓம் தித்யை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் வஸுதாயை நம:
ஓம் வஸுதாரிண்யை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் காமாக்ஷ்யை நம:
ஓம் க்ஷீரோத ஸம்பவாயை நம:
ஓம் அநுக்ரஹ ப்ரதாயை (30) நம:
ஓம் புத்தயே நம:
ஓம் அநகாயை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் அசோ’காயை நம:
ஓம் அம்ருதாயை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் லோகசோ’க விநாசி’ந்யை நம:
ஓம் தர்மநிலயாயை நம:
ஓம் கருணாயை நம:
ஓம் லோகமாத்ரே (40) நம:
ஓம் பத்மப்ரியாயை நம:
ஓம் பத்மஹஸ்தாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பத்மஸுந்தர்யை நம:
ஓம் பத்மோத்பவாயை நம:
ஓம் பத்மமுக்யை நம:



ஓம் பத்மநாபப்ரியாயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் பத்மமாலாதராயை நம:
ஓம் தேவ்யை (50) நம:
ஓம் பத்மின்யை நம:
ஓம் பத்மகந்தின்யை நம:
ஓம் புண்யகந்தாயை நம:
ஓம் ஸுப்ரஸந்நாயை நம:
ஓம் ப்ரஸாதாபிமுக்யை நம:
ஓம் ப்ரபாயை நம:
ஓம் சந்த்ரவதநாயை நம:
ஓம் சந்த்ராயை நம:
ஓம் சந்த்ர ஸஹோதர்யை நம:
ஓம் சதுர்ப்புஜாயை (60) நம;
ஓம் சந்த்ரரூபாயை நம:
ஓம் இந்திராயை நம:
ஓம் இந்துசீ’தலாயை நம:
ஓம் ஆஹ்லாதஜனன்யை நம:
ஓம் புஷ்ட்யை நம:
ஓம் சி’வாயை நம:
ஓம் சி’வகர்யை நம:
ஓம் ஸத்யை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் விச்’வஜனந்யை (70) நம:
ஓம் துஷ்ட்யை நம:
ஓம் தாரித்ர்ய நாசி’ந்யை நம:
ஓம் ப்ரீதிபுஷ்கரிண்யை நம:
ஓம் சா’ந்தாயை நம:
ஓம் சு’க்லமால்யாம் பராயை நம:
ஓம் ச்’ரியை நம:
ஓம் பாஸ்கர்யை நம:
ஓம் பில்வநிலயாயை நம:
ஓம் வராரோஹாயை நம:
ஓம் யச’ஸ்விந்யை (80) நம:
ஓம் வஸுந்தராயை நம:
ஓம் உதாராங்காயை நம:
ஓம் ஹரிண்யை நம:
ஓம் ஹேமமாலின்யை நம:
ஓம் தநதாந்யகர்யை நம:
ஓம் ஸித்தயே நம:
ஓம் ஸ்த்ரைண ஸௌம்யாயை நம:
ஓம் சு’பப்ரதாயை நம:
ஓம் ந்ருபவேச்’ம கதாநந்தாயை நம:
ஓம் வரலக்ஷ்ம்யை (90) நம:
ஓம் வஸுப்ரதாயை நம:
ஓம் சு’பாயை நம:
ஓம் ஹிரண்ய ப்ராகாராயை நம:
ஓம் ஸமுத்ர தனயாயை நம:
ஓம் ஜயாயை நம:

Credits: TamilBrahmins.com

ஓம் மங்களா தேவ்யை நம: ஓம் ஸர்வோபத்ரவ
ஓம் விஷ்ணு வக்ஷஸ்த்தல வாரிண்யை நம:
ஸ்த்திதாயை நம: ஓம் நவதுர்காயை நம:
ஓம் விஷ்ணுபத்ன்யை நம: ஓம் மஹாகாள்யை நம:
ஓம் ப்ரஸந்நாக்ஷ்யை நம: ஓம் ப்ரஹ்மவிஷ்ணு
ஓம் நாராயண சி'வாத்மிகாயை நம:
ஸ்மாச்'ரிதாயை (100)நம: ஓம் த்ரிகாலஜ்ஞான
ஓம் தாரித்ர்ய ஸம்பந்நாயை நம:
த்வம்ஸின்யை நம: ஓம் புவநேச்'வர்யை (108)நம:
ஓம் தேவ்யை நம:

நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

## உத்தராங்க பூஜை



தூபம் ததாமி தே ரம்யம்
குக்குல்வகரு ஸம்யுதம் |
க்ருஹாண த்வம் மஹாலக்ஷ்மி
பக்தாநா மிஷ்டதாயினி ||
ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: தூபமாக்ராபயாமி
(ஸாம்பிராணி / ஊதுபத்தி காட்டவும்)



ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம்
ஸர்வாபீஷ்ட ப்ரதாயினி |
தீபம் க்ருஹாண கமலே
தேஹி மே ஸர்வமீப்ஸிதம் ||
ஸ்ரீவரலஷ்ம்யை நம: தீபம் தர்ச'யாமி
(தீபத்தை காட்டவும்)





## நிவேதன மந்த்ரங்கள்



(உத்தரணியில் தீர்த்தம் எடுத்து கீழ்க் கண்ட மந்திரம் சொல்லி, தீர்த்தத்தை நைவேத்திய தட்டின் இடப்புறத்திலிருந்து வலப்புறமாக சுற்றி கீழே விட வேண்டும்.)

ஓம் பூர்புவஸ்ஸுவ:



(தீர்த்தத்தை நைவேத்யங்களின் மேல் தெளிக்கவும்.)

தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய
தீமஹி | தியோ யோ ந: ப்ரசோதயாத் |

பிரசாதத்தட்டின் மீது சிறிது நீர் தெளித்து, அதைச் சுற்றிலும் நீர் வார்க்க வேண்டும். இதை வலமிருந்து இடமாகச் செய்ய வேண்டும்.



தேவஸவித: ப்ரஸுவ | ஸத்யம்
த்வர்த்தேன பரிஷிஞ்சாமி |



(தீர்த்தத்தை எடுத்து அர்க்ய பாத்திரத்தில் விடவும்.)

அம்ருதோபஸ்தரணமஸி



(பிறகு கீழ்கண்ட மந்திரத்தை சொல்லி, ஒவ்வொரு முறையும் "ஸ்வாஹா" என்று சொன்ன பிறகு படத்தில் உள்ளது போல் ஸ்வாமியின் பக்கம் கையால் காண்பித்து நைவேத்யம் பண்ணவும்.)

ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபானாய ஸ்வாஹா, ஓம் வ்யாநாய ஸ்வாஹா, ஓம் உதானாய ஸ்வாஹா, ஓம் ஸமானாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா
ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: சா'ல்யன்னம், க்ருதகுள பாயஸம்,

Credits: TamilBrahmins.com

மாஷாபூபானி, குடாபூபானி, லட்டுகானி, மோதகானி,
நாரிகேள கண்டம், கதளீபலம், ஏதத் ஸர்வம் அம்ருதம்
மஹாநைவேத்யம் நிவேதயாமி | மத்யே மத்யே பாநீயம்
ஸமர்ப்பயாமி |



நைவேத்யாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
(தீர்த்த பாத்திரத்தில் உத்தரணியால்
தீர்த்தம் விடவும்)



அம்ருதாபிதாநமஸி ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
(தீர்த்த பாத்திரத்தில் உத்தரணியால்
தீர்த்தம் விடவும்.)



உசீரவாஸிதம் தோயம் சீதலம் சசிஸோதரீ |
பானாய க்ருஹ்யதாம் தேவி பாராவார தனூபவே |
ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: பானீயம் ஸமர்ப்பயாமி |
(தீர்த்த பாத்திரத்தில் உத்தரணியால் தீர்த்தம் விடவும்.)



பூகீஃபல ஸமாயுக்தம்
நாகவல்லீ தளைர்யுதம் |
கர்ப்பூர சூர்ண ஸம்யுக்தம்
தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ||
ஸ்ரீ வரலக்ஷ்ம்யை நம: தாம்பூலம் ஸமர்ப்பயாமி
(தாம்பூலத்தின்மேல் தீர்த்தத்தை தெளித்து, நைவேத்யம் செய்யவும்.)



நீராஜனம் நீரஜாக்ஷி
நாராயண விலாஸினி |
க்ருஹ்யதாமர்ப்பிதம் பக்த்யா
கருடத்வஜ பாமினி |
(அர்க்ய பாத்திரத்தில் தீர்த்தம் விடவும்.)



ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம:
கற்பூர நீராஜநம் தர்ச'யாமி
நீராஜநாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி |
(கற்பூரம் காண்பிக்கவும்.)





ஜாதீ சம்பக புந்நாக
மல்லிகா வகுளாதிபி: ||
புஷ்பாஞ்ஜலிம் ப்ரதாஸ்யாமி
க்ருஹாண வரலக்ஷ்மீ ஹரிவல்லபே
ஸ்ரீ வரலக்ஷ்ம்யை நம: மந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி |
ஸ்ரீ வரலக்ஷ்ம்யை நம: ஸ்வர்ண புஷ்பம் ஸமர்ப்பயாமி ||
(புஷ்பம், நாணயம் ஸமர்ப்பிக்கவும்.)



ஸர்வமங்கள லாபாய
ஸர்வபாப நிவ்ருத்தயே |
ப்ரதக்ஷிணம் கரோம்யத்ய
ப்ரஸீத பரமேச்'வரி ||
நமோஸ்து நாளீக நிபாநநாயை
நமோஸ்து நாராயண வல்லபாயை |



நமோஸ்து ரத்நாகர ஸம்பவாயை
நமோஸ்து லக்ஷ்ம்யை ஜகதாம் ஜநந்யை ||
ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: ப்ரதக்ஷிண
நமஸ்காரான் ஸமர்ப்பயாமி ||
(ப்ரதக்ஷிணம் செய்து, நமஸ்காரம் செய்யவும்.)



ஆயுராரோக்யமைச்'வர்யம்
புத்ரபௌத்ரான் பசூ'ந் தனம் |
ச'த்ருக்ஷயம் மஹாலக்ஷ்மி
ப்ரயச்ச கருணாநிதே ||
(ப்ரார்த்தனை செய்யவும்)

## ராஜோபசாரங்கள்

(கீழ்கண்ட மந்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் புஷ்பம் அக்ஷதை போடவும்.)

ச்சத்ரம் ஸமர்ப்பயாமி வாத்யம் கோஷயாமி
சாமரம் ஸமர்ப்பயாமி அச்'வம் ஆரோபயாமி
ந்ருத்யம் தர்ச'யாமி கஜம் ஆரோபயாமி

Credits: TamilBrahmins.com

ரதம் ஆரோபயாமி
ஸமஸ்த ராஜோபசார கீதம் ச்'ராவயாமி
தேவோபசாராபூஜா: ஸமர்ப்பயாமி



## தோரக்ரந்தி பூஜை

(பூஜையில் மஞ்சள் தடவிய 9 நூல்களில் 9 முடிச்சுகள் போட்டு மஞ்சள் சரடுகளை தயார் செய்து கொள்ள வேண்டும். அந்த சரடுகளை பூஜையில் வைத்து பூஜித்து, பூஜை முடிந்ததும் வலதுகையில் அணிய வேண்டும். சரட்டில் உள்ள 9 முடிச்சுகளில், ஒவ்வொன்றையும் புஷ்பம் அக்ஷதை இவைகளால் பூஜிக்கவும்.)

ஓம் கமலாயை நம: ப்ரதம க்ரந்திம் பூஜயாமி
ஓம் ரமாயை நம: த்விதீய க்ரந்திம் பூஜயாமி
ஓம் லோக மாத்ரே நம: த்ருதீய க்ரந்திம் பூஜயாமி
ஓம் விச்'வ ஜநந்யை நம: சதுர்த்த க்ரந்திம் பூஜயாமி
ஓம் மஹாலக்ஷ்ம்யை நம: பஞ்சம க்ரந்திம் பூஜயாமி
ஓம் க்ஷீராப்தி தநயாயை நம: ஷஷ்டம க்ரந்திம் பூஜயாமி
ஓம் விச்'வஸாக்ஷிண்யை நம: ஸப்தமக்ரந்திம் பூஜயாமி
ஓம் சந்த்ரஸோதர்யை நம: அஷ்டம க்ரந்திம் பூஜயாமி
ஓம் ஹரிவல்லபாயை நம: நவம க்ரந்திம் பூஜயாமி





## சரடை கையில் கட்டும்போது சொல்லப்படும் ச்'லோகம்

ஸர்வமங்கள மாங்கள்யே ஸர்வபாப ப்ரணாசி'னி |
தோரகம் ப்ரதிக்ருஹ்ணாமி ஸுப்ரீதா பவ ஸர்வதா ||

(முதலில் தாம்பாளத்தில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு மஞ்சள் வைத்து சுமங்கலி கையில் கொடுத்து, கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி,)

நவ தந்து ஸமாயுக்தம் நவக்ரந்திஸமன்விதம் |
பத்னீயாம் தக்ஷிணே ஹஸ்தே தோரகம் ஹரிவல்லபே ||

(சரடை எடுத்து வலது கையில் கட்டிவிடவேண்டும். இதே போல் மற்ற சுமங்கலிகளுக்கும் சரடை கட்டிவிட வேண்டும்.)

## அர்க்யப்ரதானம்



(பூஜை முடிந்த பிறகு, தேவியை உத்தேசித்து பாலால் அர்க்யம் விடவும்.)

சு'க்லாம்பரதரம் விஷ்ணும்
ச'சி'வர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்நோப சா'ந்தயே ||
மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா
ஸ்ரீபரமேச்'வர ப்ரீத்யர்த்தம் ஸ்ரீ வரலக்ஷ்மீ
பூஜாந்தே க்ஷீரார்க்ய ப்ரதானம்,
உபாயன தானஞ்ச கரிஷ்யே ||

(கையில் புஷ்பம், சந்தனம், குங்குமம், அக்ஷதை எடுத்து கீழ்காணும் மந்திரத்தைச் சொல்லி பாலால் அர்க்யம் விடவும்.)

கோக்ஷீரேண யுதம் தேவி
கந்த புஷ்ப ஸமந்விதம் ||
அர்க்யம் க்ருஹாண வரதே
வரலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே ||
ஸ்ரீவரலக்ஷ்ம்யை நம: இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம் ||

Credits: TamilBrahmins.com

## க்ஷமா ப்ரார்த்தனை

காயேனவாசா மனஸேந்திரியைர்வா
புத்யாத்மனாவா ப்ரக்ருதே: ஸ்வபாவாத் |
கரோமியத்யத் ஸகலம் பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்பயாமி ||
மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் ஸுரேச்'வரி |
யத் பூஜிதம் மயா தேவ தேவி பரிபூர்ணம் ததஸ்து தே ||
அனயாபூஜயா ஸித்தி விநாயக: ப்ரீயதாம்
ஓம் தத் ஸத் ப்ரஹ்மார்ப்பணமஸ்து |

## உபாயன தானம்

(சாஸ்திரிகள் அல்லது வீட்டில் உள்ள பெரியவருக்கு கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி தாம்பூலம் கொடுத்து அவர்களது ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும்.)



வரலக்ஷ்மீ ஸ்வரூபஸ்ய
ப்ராஹ்மணஸ்ய இதமாஸனம் |
(அவர்கள் தலையில் அக்ஷதை போடவும்.)
ஸகலாராதனை: ஸ்வர்ச்சிதம் ||

(என்று சொல்லி தட்டில் தாம்பூலம், தக்ஷிணை வைத்து அதில் கொஞ்சம் ஜலம் விட்டு, கீழ்காணும் மந்திரத்தைச் சொல்லவும்.)

ஹிரண்யகர்ப கர்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோ: |
அனந்த புண்ய ஃபலதம் அத: சா'ந்திம் ப்ரயச்ச மே ||
இந்திரா ப்ரதி க்ருஹ்ணாதி இந்திரா வை ததாதி ச |
இந்திரா தாரகா த்வாப்யாம் இந்திராயை நமோ நம: ||

இதமுபாயனம் ஸதக்ஷிணாகம், ஸதாம்பூலம், வரலக்ஷ்மீ பூஜா ஃபல ஸாத்குண்யம் தீர்க்க ஸௌமங்கல் யாவாப்திம்,



ஸத்புத்ர பௌத்ராபிவ்ருத்திம், வரலக்ஷ்மீ ப்ரீதிம் ஸகாமயமாநா துப்யம் அஹம் ஸம்ப்ரததே ந மம ||
(என்று தாம்பூலம் தானம் கொடுக்கவும்.)

பிறகு அம்மனுக்கு ஆரத்தி எடுத்து சுமங்கலிகளுக்கு போஜனம் செய்வித்து தாம்பூலம் கொடுக்க வேண்டும்.

## புனர் பூஜை

மறுநாள் காலை விளக்கேற்றி தன்னால் இயன்றதை நைவேத்யம் செய்து தூபம், தீபம் கற்பூரம் காட்டி அம்பாளை பிரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்யவும். பிறகு மங்கள ஆரத்தி எடுத்து சுமங்கலிகளுக்கு தாம்பூலம் கொடுத்தபின் வரலக்ஷ்மியை கலசத்துடன் அரிசிப்பானையில் வைக்கவும்.

சுபமஸ்து

இந்த்ரன் அருளிய

## ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டகம்

நமஸ்தே(அ)ஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே |
ச'ங்கசக்ர கதாஹஸ்தேமஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 1
நமஸ்தே கருடாரூடே டோலாஸுர பயங்கரி |
ஸர்வ பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 2
ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி |
ஸர்வ துக்கஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 3
ஸித்தி புத்தி ப்ரதே தேவி புக்தி முக்தி ப்ரதாயினி |
மந்த்ர மூர்த்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 4
ஆத்யந்த ரஹிதே தேவி ஆதிச'க்தி மஹேச்'வரி |
யோகஜ்ஜே யோகஸம்பூதே மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 5
ஸ்த்தூல ஸூக்ஷ்ம மஹாரௌத்ரே மஹாச'க்தி மஹோதரே |
மஹாபாபஹரே தேவி! மஹாலக்ஷ்மி! நமோ(அ)ஸ்துதே || 6

Credits: TamilBrahmins.com

பத்மாஸன ஸ்த்திதேதேவி! பரப்ரஹ்ம ஸ்வரூபிணி |
பரமேசி'ஜகன்மாத: மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 7

ச்'வேதாம் பரதரே தேவி நானாலங்காரபூஷிதே |
ஜகத்ஸ்த்திதே ஜகன்மாத: மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே ||8

மஹாலக்ஷ்ம் யஷ்டகம்ஸ்தோத்ரம் ய: படேத் பக்திமான்நர: |
ஸர்வஸித்தி மவாப்னோதி ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா|| 9

ஏககாலே படேந்நித்யம் மஹாபாப வினாச'நம் |
த்விகாலம் ய: படேந் நித்யம் தனதான்ய ஸமன்வித: || 10

த்ரிகாலம் ய: படேத் நித்யம் மஹாச'த்ரு விநாச'னம் |
மஹாலக்ஷ்மீர் பவேந் நித்யம் ப்ரஸன்னா வரதா சு'பா || 11

யதக்ஷர– பத – ப்ரஷ்டம் மாத்ராஹீனம் து யத்பவேத் |
தத்ஸர்வம் க்ஷம்யதாம் தேவ வரலக்ஷ்மீ நமோஸ்து தே ||
விஸர்க – பிந்து – மாத்ராணி பத பாதாக்ஷராணி ச |
ந்யூனானி சாதிரிக்தானி க்ஷமஸ்வ பரமேச்'வரி ||
அன்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம |
தஸ்மாத் காருண்ய பாவேன ரக்ஷ ரக்ஷ ஜகதீச்'வரி ||

உச்சாரண காலத்தில் அகாரத்திலோ, பதத்திலோ, மாத்திரையிலோ எந்த பிழை ஏற்பட்டதோ, அதை மன்னித்து அருள்வாயாக! ஸ்ரீ வரலக்ஷ்மியே உமக்கு நமஸ்காரங்கள்

ஹே பரமேச்'வரியே! உச்சாரண காலத்தில் - விஸர்க்கத்திலோ, பிந்துவிலோ, மாத்திரைகளிலோ, பதங்களிலோ, பாதங்களிலோ, அகாரங்களிலோ மிகையாகவோ, குறைவாகவோ ஏற்பட்ட தவற்றை மன்னித்து அருள்வாயாக!

வேறு யாரும் எனக்கு கதியில்லை நீ தான் எனக்கு சரணம், ஆகையால் கருணையுள்ள எண்ணத்துடன், ஜபித்துள்ளேன்! என்னை காப்பாற்று!

சுபம்.

Credits: TamilBrahmins.com